தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
ஆணை எண். 63/மா/2021

நாள் 24.11.2021

S.T.சுந்தரபாண்டியன்,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தூத்துக்குடி மாநகராட்சி – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாநகராட்சி, பாளையங்கோட்டை சாலை, எண்.130 என்ற முகவரியில் வசிக்கும் திரு S.T.சுந்தரபாண்டியன், தலைவர், தூத்துக்குடி காய்கனி மார்க்கெட் பிரைவேட் லிமிடெட் என்பவரது 10.02.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.02.2021–ல் பெறப்பட்டு 63/2021 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

தூத்துக்குடி மாநகராட்சி, பாளையங்கோட்டை சாலை, எண்.130 என்ற முகவரியில் வசிக்கும் திரு S.T.சுந்தரபாண்டியன், தலைவர், தூத்துக்குடி காய்கனி மார்க்கெட் பிரைவேட் லிமிடெட் என்பவர் தனது முறையீட்டு மனுவில், " தூத்துக்குடி பகுதியில் உள்ள விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை சீரிய முறையில் சந்தைப்படுத்த சிறு விவசாயிகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய நிறுவனம் தூத்துக்குடி காய்கனி மார்க்கெட் என்று அழைக்கப்படும் Tutocorin Vegetable Marketing Company Pvt. Ltd. 1962–ல் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை எம் பகுதி விவசாயிகள் காய்கனி, வாழைத்தார் போன்ற விளைபொருட்களை மேற்கண்ட மார்க்கெட்டின் மூலம் வியாபாரம் செய்து பலன் அடைந்து வருகிறார்கள். மும்பை, நாசிக், புனே பகுதியில் இருந்து பல்லாரிவெங்காயம் மற்றும் தமிழகமெங்கும் இருந்து

காய்கனி, வாழைத்தார் தங்களது மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது மேலும் எங்கள் மார்க்கெட்டில் எங்கள் பகுதி விவசாயிகள் முதலீடு செய்து உருவாக்கப்பட்ட தனியார் நிறுவனம் (Private Limited Company) ஆக உருவாக்கம் செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம் முழுமையிலும் உள்ள மொத்த மற்றும் சில்லரை காய்கனி வியாபாரிகளும் தூத்துக்குடி பொதுமக்கள் அனைவருமே எங்கள் மார்க்கெட்டில் தான் காய்கனி வாங்கி பயன்பெறுகிறார்கள். வியாபாரிகள் விவசாயிகள் உரிய விலையில் தங்களது விவசாய விளைபொருட்களாகிய காய்கனி, வாழைத்தார் ஆகியவற்றை விற்பதற்கும் பொதுமக்கள் நியாயமான விலையில் காய்கனிகளை தரமான நிலையில் வாங்கிக்கொள்ளவும் நல்ல தளமாக எங்களது நிறுவனம் (Market) அமைந்துள்ளது. எங்களுடைய மார்க்கெட்டிற்கு தூத்துக்குடி மாநகராட்சி உரிமை கட்டணம் ( Licence Fees) ஆக எங்களுடைய நிகர வருமானத்தில் 5% ஐ வசூலித்து வந்தனர். அதன்பின்பு 11 சதவீதமாக உயர்த்தினர். இறுதியில் 25 சதவீதமாக வசூல் செய்து வருகின்றனர். தங்களுடைய சட்டம் 382–ன்படி 25 சதவீதத்திற்கு மிகாமல் வசூலிக்க வேண்டும் என்று மட்டுமே உள்ளது. நகராட்சி மற்றும் மாநகராட்சி மாமன்றம் இருந்த காலங்களிலெல்லாம் குறைவான சதவிகிதமே நிர்ணயம் செய்து வசூலித்து வந்தார்கள். ஆனால் தற்பொழுது மாநகராட்சி 25 சதவீதமாக நிர்ணயம் செய்து வசூலித்து விடுகிறார்கள் என்றும், கடந்த 2020 ஜுன் மாதம் எங்களுடைய மார்க்கெட் கோவிட் சமூக இடைவெளிக்காக அடைக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் உடனடியாக Licence Fees நிலுவை தொகையை செலுத்த வேண்டும் என்று மாநகராட்சியால் நிர்ப்பந்திக்கப்பட்டோம். எங்களுடைய வருமான விவரங்களை சமர்ப்பித்தோம். அப்பொழுது நிகர வருமானத்தில் இருந்து Licence Fees நிர்ணயம் செய்வதற்கு பதிலாக மொத்த வருவாய் (Turn Over ) –ல் அதிகபட்சமாக 25 சதவீதம் என்று நிர்ணயம் செய்து அதையும் உடனடியாக செலுத்த வேண்டுமென்று நிர்ப்பந்தித்து செலுத்தும்படி கேட்கப்பட்டதால் எங்களுடைய எதிர்ப்புடன் செலுத்தினோம். மொத்தமாக 3 ஆண்டுகளுக்கு ரூ. 20,49,207/– செலுத்தினோம். Turn Over –ல் 25 சதவீதம் செலுத்துவது என்பது நியாயமாய் தொழில் செய்பவர்களால் முழுக்க முழுக்க முடியாத ஒன்று என்றுஅனைவரும் அறிவோம். காய்கனி விவசாய விற்பனையாளர்களையும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களையும் விவசாயிகள் நலனுக்காக இணைக்கும் ஒரு பாலமாகவே மார்க்கெட் நடத்தி வருகிறோம். இன்றைய மத்திய அரசு புதிதாக காய்கனி உட்பட விவசாய விளைபொருட்களை சீரிய முறையில் சந்தைபடுத்த முனைந்து எங்கள் மார்க்கெட் போன்ற மார்க்கெட்களுக்கு அரசு எவ்வித கட்டணமும் வசூல் செய்ய கூடாது என்று கீழ்கண்டவாறு தெளிவாக உத்தரவிட்டுள்ளது. " The Farmers Produce Trade and Commerce (Promotion and Facilitation) Act, 2020 – Chapter-II. Para 6 reads as follows:

No market fee or cess or levy, by whatever name called, under any State APMC Act or any other State Law, shall be levied on any farmer or trader or

electronic trading and transaction platform for trade and commerce in scheduled farmers produce in a trade area " .

மேற்கண்ட விவரங்களை தெரிவித்து முறையீட்டு மனுதாரர் தங்களது மார்க்கெட்டிற்கு தூத்துக்குடி மாநகராட்சியால் விதிக்கப்படும் உரிமை கட்டடணத்தை (Licence Fee) யை ரத்து செய்ய வேண்டுமென்றும் மேலும் தங்களிடம் வசூல் செய்த தொகையை Refund செய்யுமாறு உத்தரவிடும்படியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை 11.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.11.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மனுதாரர் 11.11.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியில் உள்ள விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை சீரிய முறையில் சந்தைப்படுத்த சிறு விவசாயிகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய தூத்துக்குடி காய்கனி மார்க்கெட்டில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்கள் மற்றும் காய்கனிகளை சந்தைப்படுத்தி வாழ்ந்து வருகின்றனர். தமிழகமெங்கும் இருந்து காய்கனி வரவழைக்கப்பட்டு வியாபாரம் செய்து வரும் எங்களுக்கு மாநகராட்சியால் விதிக்கப்படும் உரிமையாணை கட்டணத்தை ( Licence Fees) எங்களால் கட்ட இயலவில்லை என்றும் மேற்கண்ட லைசன்ஸ் கட்டணத்தை ரத்து செய்திட ஆவண செய்யும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக் கொள்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

3. தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையாளர் திரு து. சந்திரமோகன் 11.11.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" தூத்துக்குடி மாநகராட்சியில் இயங்கி வரும் காய்கனி அங்காடி வியாபாரிகள் தங்களுக்கு விதிக்கப்படும் உரிமை கட்டணத்தை (Licence Fees)–ஐ ரத்து செய்ய வேண்டுமென்று மனுவை அளித்துள்ளனர். இந்நேர்வு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளதால், இந்நேர்வில் தற்போது மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். மேலும் எனது 21.09.2021 நாளிட்ட எழுத்துபூர்வமான அறிக்கையினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் '' என்று தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலம் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் மனுதாரர் உரிமைக்கட்டணம் (Licence fees) தொடர்பாக W.P. (MD) No. 11792/2021 வழக்கை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்துள்ளார். அது நாளது தேதி வரை நிலுவையில் உள்ளது. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் பிரிவு 10 (3) (b)–ன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்தல் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இம்மனு மீது எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்க இயலாது என முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. S.T.சுந்தரபாண்டியன்,
தலைவர்,
தூத்துக்குடி காய்கனி மார்க்கெட் பிரைவேட் லிட்,
130, பாளையங்கோட்டை சாலை,
தூத்துக்குடி – 3.

ஆணையாளர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

நகல்
மாண்புமிகுமுறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்

இ.கோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

24/11/21

செயலாளர்